அட்டாளைச்சேனை பிரதேச சபை

அம்பாறை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஓகஸ்ட் 20 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 11 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 24 இல் சபையின் தவிசாளருற்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து அட்டாளைச்சேனை பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

உள்ளுராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா 11,500 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் யுநெப்ஸ் (UNOPS) நிறுவனத்திடமிருந்து அன்பளிப்பாக பெறப்பட்ட 16 அலுவலக உபகாரணங்களின் பெறுமதி, சபையால் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் புறநெகும திட்டத்தின் கீழ் பிரதேச சபை அலுவலகக் கட்டிடம் மற்றும் பொது சந்தைக் கட்டிடம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு ரூபா 15,773,734 மற்றும் ரூபா 8,294,750 தொகைகளான இரண்டு பகுதிக் கொடுப்பனவுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் முறையே ரூபா 48,643,462 மற்றும் ரூபா 19,903,523 தொகைகள் கொடுப்பனவு செய்யப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் ஒப்பந்தக்காரருக்கான கொடுப்பனவு முறையே ரூபா. 32,869,728 மற்றும் ரூபா 11,608,773 தொகைகளால் அதிகரித்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

(ஈ) 2005 ஆம் ஆண்டில் காணமால் போன ரூபா 96,392 பெறுமதியான மின்சாரப் பொருள் இருப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களிலும் இருப்பில் கணக்கிடப்பட்டுள்ளது.

(உ) நிதிக்கூற்றுக்களில் ஊழியர் முற்பணக் கடன் மீதி கணக்கீட்டுத் தவறின் காரணமாக ரூபா 12,500 தொகையினால் குறைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

(ஊ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட அலுவக தளபாடங்கள் மற்றும் பொறித் தொகுதிகளின் மொத்தப் பெறுமதி ரூபா 257,735 கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2005 ஆம் ஆண்டில் பிரதேச சபை இலங்கை மின்சார சபைக்கு ஒப்படைத்த பொருட்கள் தொடர்பாக மின்சார சபையிடமிருந்து பெறவேண்டிய ரூபா 350,322 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இடமாற்றம் பெற்றுச் சென்ற 10 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 31,875 கடன் மீதியை சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அறவிடுவதற்கு 2014 நவம்பர் 28 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| காணிகள் கட்டிடங்கள் | 133,207,743 | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் மெய்மையவுச் சபை அறிக்கைகள் |
| உபகரணங்கள் மற்றும் கருவிகள் | 116,395 | |
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 734,100 | |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 431,365 | |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 13,153,987 | முற்பணப் பதிவேடு |
| செலுத்தவேண்டிய மின்சாரப் பொருள் கடன் | 316,421 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் |

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ)1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் அமைச்சினது 1988 ஜனவரி 13 ஆம் திகதிய 488/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 31(1) ஆம் உப பிரிவு | பிரதேச சபைகளின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் நிறைவான தீர்மானங்களை பெற்றுக்கொள்வதற்காகவும், மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபையில் நிதி, கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி, தொழில்நுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், நிதி தவிர்ந்த ஏனைய விடயங்களுக்கு பெறுப்பான குழுக்கள் மீளாய்வாண்டில் செயற்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) நிதிப் பிரமாணம் 571(2) | 1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் இறுதிவரை வைப்புக் கணக்கில் காட்டப்பட்டுள்ள முறையே ரூபா.689,311 மற்றும் ரூபா.200,000 தொகையான அடையாளம் காணப்படாத மற்றும் காலங்கடந்த வைப்புக்களை உரிய நபர்களுக்கு செலுத்தவதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றம் செய்வதற்கு 2014 நவம்பர் 28 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு
---------------------

2.1 நிதி விளைவுகள்.
--------------------------

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 8,360,916 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 3,518,959 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 4,841.957 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்
------------------------------------------

2.2.1 வீதவரிகள் மற்றும் வரிகள்
-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134, 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு இறுதிவரை வீதவரிகள் அறவிடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் வரவு செலவுத் திட்டத்தில் மீளாய்வாண்டிற்காக வீதவரியாகச் சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்ட ரூபா.252,000 தொகையில் 16.5% ஆன ரூபா 41,669 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(இ) 2005 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கான இறைச்சிக் கடைக் குத்தகை நிலுவை ரூபா.273,300 தொகையை அறவிடுவதற்கு 2014 நவம்பர் 28 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 உத்தரவுப்பத்திரக் கட்டணம்
-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் கடைகள் மற்றும் நிறுவனங்களை நடத்துவதற்கு உத்தரவுப்பத்திரக் கட்டணமாக அறவிடுவதற்காக மதிப்பிடப்பட்ட ரூபா.1,100,500 தொகையில் 43.72% ஆன ரூபா 477,360 தொகையே அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளை சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 15 விளம்பரப் பலகைகளுக்காக கட்டணம் ரூபா 74,350 அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.3 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான கட்டண அறவிடு
---------------------------------------------------------------------------------------------

பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நிறுவப்பட்ட 12 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு அறவிடப்படவேண்டிய ரூபா 425,000 தொகையான உரிமைக்கட்டணத்தை 2014 நவம்பர் 28 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 முத்திரைக் கட்டணங்கள்
----------------------------------------

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக கிடைக்கவேண்டிய ரூபா 1,164,264 முத்திரைக் கட்டணத் தொகையினை பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு 2014 நவம்பர் 28 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவ பலவீனம்

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டில் பிரதேச சபையினால் ரூபா 1,100,000 தொகைக்கு சோடியம் வகையைச் சேர்ந்த 80 மின்குமிழ்கள் மற்றும் பொருத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்ட போதிலும், 21 மின்குமிழ்கள் மட்டும் செயற்படும் நிலையில் உள்ளதுடன் எனைய 59 மின்குமிழ்களும் 08 மாதங்களுக்கு மேலாக பயன்பாடற்று இருந்தது.

(ஆ) பாலமுனை மற்றும் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானங்களில் 06 வகையான 45 பழமரக்கன்றுகள் ரூபா 18,360 தொகைக்கும் அவற்றை பாதுகாப்பதற்கான 20 கூடுகள் ரூபா 38,000 தொகைக்கும் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், 2014 நவம்பர் 26 ஆம் திகதியில் நடைபெற்ற பௌதீக மெய்மையாய்வின் போது 12 பாதுகாப்பு கூடுகள் மாத்திரம் குறித்த மைதானத்தில் காணப்பட்டதனால் சபையால் இதற்காக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 56,360 தொகை விளைவற்ற செலவீனமாகும்.

(இ) அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் ஓய்வு அறை மற்றும் மலசலகூட நிர்மாணம் தொடர்பாக 2012 மே 25 ஆம் திகதி சபை நிதியிலிருந்து சனசமூக நிலையம் ஒன்றிக்கு ரூபா 474,911 தொகையான முற்பணம் வழங்கப்பட்டதுடன் நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்ட போதிலும், 2014 நவம்பர் 26 ஆந் திகதி வரை அம் முற்பணம் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதேச சபையின் 2012 ஆம் ஆண்டு மற்றும் 2013 ஆம் ஆண்டுக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் 24 வகையான 198 சொத்துக்களின் பற்றாக்குறைகள் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் தொடர்பாக 2014 நவம்பர் 26 ஆந் திகதி வரை முகாமைத்துவத்தினால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 ஓப்பந்த நிர்வாகம்

3.3.1 பொதுச் சந்தைக் கட்டிட நிர்மாணம்

பொதுச் சந்தை கட்டிடம் நிமாணிப்பதற்காக ரூபா 16,345,000 தொகைக்கு பிரதேச சபையால் ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் படி வேலை 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 86 நாட்கள் காலதாமதத்தின் பின்னர் பூர்த்தி செய்யப்பட்டதினால் ஒப்பந்தத்தில் கூறப்பட்டதற்காமைய காலதாமதத்திற்கான தண்டப்பணம் ரூபா 764,153 ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்படாதிருந்தது.

3.3.2 அலுவலகக் கட்டிட நிர்மாணம்

அலுவலகக் கட்டிட நிர்மாணம் தொடர்பாக பிரதேச சபையினால் ரூபா.43,431,938 தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒப்பந்தத்தில் கூறப்பட்டதற்கமைய ஒப்பந்த காலத்தினுள் ஒப்பந்தக்காரரால் முற்பணம் பெறுவதற்காக ரூபா.8,686,787 தொகைக்கு தனிப்பட்ட வங்கி ஒன்றின் மூலம் முற்பண முறி ஒன்றினை ஒப்பந்தக்காரர் வழங்கியிருந்தார். வங்கியிலிருந்து கணக்காய்வுக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவலின்படி ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்டமைக்காக சமர்ப்பிக்கப்பட்ட முற்பண முறியானது குறித்த வங்கியால் வழங்கப்படாத போலியானது என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

(ஆ) ஒப்பந்தத்தில் கூறப்பட்டதற்கமைய ஒப்பந்த காலத்தினுள் ஒப்பந்தக்காரரால் வேலை முடிவுறும் காலம் வரைக்கும் ரூபா.2,171,700 தொகைக்கு தனிப்பட்ட வங்கி ஒன்றின் மூலம் 02 செயற்பாட்டு முறிகளை ஒப்பந்தக்காரர் வழங்கியிருந்தார். வங்கியிலிருந்து கணக்காய்வுக்கு கிடைக்கப்பட்ட தகவலின்படி ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தக் காலம் நீடிக்கப்படாமைக்காக சமர்ப்பிக்கப்பட்ட அச் செயற்பாட்டு முறிகளானது குறித்த வங்கியால் வழங்கப்படாத போலியானவை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

(இ) இவ்வாறு ஒப்பந்தக்காரரால் போலியான முற்பண மற்றும் செயற்பாட்டு முறிகளைச் சமர்ப்பிருந்தபோதிலும் சபை ஒப்பந்தக்காரருக்கு எதிராக இன்றுவரை எவ்வித நடவடிக்கைளையும் எடுத்திருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமை மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்